**அக்டோபர்: 28**

## சபையில் புதிய ஆத்துமாக்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

**வாசிக்க: அப்போஸ்தலர் 2:40-47**

பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். எல்லாருக்கும் பயமுண்டாயிற்று. அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்பட்டது. விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள். காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்துகொடுத்தார்கள். அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள் தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வந்தார்.




குட்டீஸ்,
நாம் கடந்த இரு தினங்களாக திருச்சபையின் பிறப்பும், ஆரம்ப வளர்ச்சியும் குறித்து தியானித்து கொண்டிருக்கிறோம். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு வந்து மனிதன் எப்படி தேவன் உருவாக்கிய மனிதனாக வாழவைண்டும் என வாழ்ந்து காட்டியவர். அவருடைய சிலுவை மரணத்தின் வழியாக பிதாவோடு நம்மை ஒப்புரவாக்கி வைத்த பின்னர் மூன்றாம் நாள் உயிரோடு எழுந்து தம்மை விசுவாசித்து ஏற்று கொண்ட யாவரும் வெற்றிவாழ்க்கை வாழ தம்முடைய ஆவியானவரை அவர்கள் இருதயத்திலேயே இருக்க அனுப்பி தந்தார். இது தான் சுவிசேஷத்தின் இரத்தினச்சுருக்கம். ஆனால் இதில் முக்கியமாக கவனிக்க வேண்டிய இரண்டுபகுதி உள்ளது. ஒன்று நாம் செய்யவேண்டியது. மற்றொன்று தேவஆவியானவர் செய்யவேண்டியது. பேதுருவானாலும் நாமானாலும் கிறிஸ்துவின் அன்பினாலும், பரிசுத்த ஆவியினவரை வல்லமையாலும், ஆத்துமாக்களை குறித்த பாரத்தினாலும் நிறைந்தவர்களாய் சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டும். தேவஆவியானவர் தாமே மனதுருக்கத்தோடு ஜனங்களுடைய உள்ளத்திலே கிரியை செய்து இரட்சிப்புக்கு நேராய் அவர்கள் இருதயத்தை திருப்புவார். இவையிரண்டும் நடைபெற நாமெல்லாரும் ஜெபிக்க வேண்டும். இப்படி தான் ஆரம்பகால வளர்ச்சி திருச்சபையை வளரச்செய்தது. எனவே நீயும் அப்படியே ஜெபித்து செயல்படுவாயா செல்லக்குட்டி…?

நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார். **யோவான் 13:35**

**<u>ஜெபம்</u>**

பரிசுத்தமுள்ள எங்கள் அன்பு தகப்பனே, நான் சுவிசேஷம் அறிவிக்கும்படி, உங்க ஆத்துமபாரம், கிறிஸ்துவின் அன்பும், பரிசுத்த ஆவியினவரின் வல்லமையும் தாரும். இயேசுவின்மகிமையான நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே.

